# உடன்பிறப்பே... 79

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த நாட்றம்பள்ளி என்.கே.ராசா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# நாட்றம்பள்ளி என்.கே.ராசா
# ‘தொழிலைத் துச்சமென்ற கழகக்காரர்!’

தமிழ்நாட்டின் வடமேற்கு எல்லை மாவட்டங்களில், இன்றைய திருப்பத்தூர் மாவட்டத்தில், அன்றைய வட ஆற்காடு அதன்பின்னர் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டமாக இருந்தபோது, கழகத்தின் அரசியலை உயர்த்திப் பிடித்த முன்னோடிகள் அதிகம். வேலூர் வி.எம்.தேவராஜ், பா.சாரதி, ப.உ.சண்முகம், முல்லை சக்தி, ஆம்பூர் சம்பங்கி, ஆரணி செல்வராசு , ஆற்காட்டார் என நீளும் பட்டியலில் என்.கே.ராசா தவிர்க்க முடியாதவர். தமிழ்நாடு - ஆந்திரா எல்லையோரத்தில் அமைந்துள்ள நாட்றம்பள்ளி ஒன்றியப் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடி.

மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டபோது, தமிழ்நாடு - ஆந்திரா எல்லையோர மாவட்டங்களில் தமிழ் மக்கள் இருந்த கிராமங்கள் ஆந்திராவில் இணைக்கப்பட்டன. இன்று, ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வலுக்கட்டாயமாக ஆந்திராவில் இணைக்கப்பட்டன. அப்போது நடைபெற்ற எல்லை மீட்புப் போராட்டங்களில் கழகமும் முழுவீச்சாக ஈடுபடுத்திக் கொண்டது. அந்தக் களத்தில், நாட்றம்பள்ளி, வாணியம்பாடி பகுதிகளில் முன்னணியில் நின்றவர் என்.கே.ராசா.

கழகத்தின் தொடக்கக் கால உறுப்பினர். திராவிட இயக்கத் தொடர்புகளோடு தீவிர அரசியலில் ஈடுபடலானார். இவரது தந்தையும், அவரது நண்பர்களும் இணைந்து பெரியாரை அழைத்து வந்து நாட்றம்பள்ளியில் கூட்டங்களை நடத்தி இருக்கின்றனர். அந்த வகையில், தந்தையின் அரசியல் ஈடுபாடு, ராசா அவர்களையும் பற்றிக் கொள்கிறது.

1934-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் பெயர் கந்தசாமி - சாமக்காள். விவசாயக் குடும்பப் பின்னணி கொண்ட குடும்பம் என்பதுடன், நெடுஞ்சாலை ஒப்பந்தப் பணிகளையும் செய்து வந்தவர் ராசாவின் தந்தை.

நாட்றம்பள்ளி தொடக்கப் பள்ளியிலும், பின்னர் திருப்பத்தூரில் உயர்நிலைக் கல்வியும் கற்ற ராசா, கழகம் உருவாக்கப்பட்டபோது, பேரறிஞர் அண்ணாவைப் பின்பற்றி தீவிர அரசியலில் ஈடுபடலானார்.

## சிறை வகுப்புகள்

திராவிடர் கழகத்தில் இருந்து வெளியேறியவர்களில் கணிசமானோர் வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்தவர்கள்தான். அப்போது ஆந்திரா-தமிழ்நாடு எல்லையோர மாவட்டங்களில் கிளைக் கழகங்களை அமைத்ததுடன், கிளைக் கழகங்களில் இருந்து, ஒன்றியக் கழகங்களுக்கு செயலாளர்கள் தேர்வானபோது எந்தப் போட்டியும் இன்றி தேர்வானவர் ராசா. அந்தப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து, தனது இறுதிக் காலம் வரை 1997-ஆம் ஆண்டு வரை ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்தவர். கழக அமைப்புத் தேர்தல்களின் போது போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் ராசா அவர்கள் திருப்பத்தூர், நாட்றம்பள்ளி மக்களைத் திரட்டி நின்றவர். இந்தி எதிர்ப்புப் போராட்டம், மிசா சிறைவாசம் என வேலூர் சிறையில் கழகத்தினருக்கு என்றே இருக்கும் அறைகளில் இளைஞர்களுக்கு அரசியல் வகுப்புகள் நடக்கும். அதில் பேச்சாளராகவும், பயிற்சியாளராகவும் இருந்தவர் ராசா. ப.உ.ச அவர்கள் மாணவராக அவருடன் இணக்கமாக பயணித்தவர்.

## பின்தங்கிய பகுதியில் அரசியல்

நாட்றம்பள்ளி பகுதி, பின்தங்கிய கிராமப்புறப் பகுதி என்பதால், தொடக்கத்தில் காங்கிரஸ் செல்வாக்கு செலுத்தியது. அதை மாற்றிக் காட்டியவர்களில் ராசாவும் ஒருவர். 1967, 1971-ஆம் ஆண்டு தேர்தல்களில் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றவர் திம்மராயர். காங்கிரஸ் சார்பில் நின்றவர் ராசா அவர்களின் சொந்த மாமனார். மாமனாரே தேர்தலில் நின்றாலும், அவர் களப்பணியாற்றியது கழக வேட்பாளருக்கு என்பதுதான் அவரது கழகப் பற்றின் சான்று.

கழகத்தில் இருந்து எம்.ஜி.ஆர் பிரிவின்போது, கடினமான அந்த அரசியல் காலங்களில் 1980-ஆம் ஆண்டு தேர்தலின் போது ராசாவையே களம் இறக்கினார் கலைஞர். மீண்டும் 1984-ஆம் ஆண்டு தேர்தலின்போது ராசாவுக்குத்தான் வாய்ப்பு அளித்தார். இரண்டு முறையும் வெற்றியை எட்ட முடியவில்லை என்றாலும், 1986- ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில், நாட்றம்பள்ளி ஒன்றியக்குழுத் தலைவராக மக்களின் நேரடித் தேர்வு மூலம் பொறுப்பேற்றவர். கலைஞரின் நம்பிக்கைக்குரிய அந்தக் களபணியாளருக்கு மீண்டும் 1991- ஆம் ஆண்டு தேர்தல் வாய்ப்பு வந்தபோது, ராஜீவ்காந்தி மரணத்தால் உருவான அலையில் தோல்வியைத் தழுவினர்.

## தலைமைக் கழக முடிவு

1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது என்.கே.ராசா அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்படலாம் என எதிர்பார்ப்பு எழுந்தபோது, கழகத்தில் இருந்து ஆர்.மகேந்திரன் அவர்களுக்கு வாய்ப்பு அளித்தார் கலைஞர். அப்போது நாட்றம்பள்ளி கழகத்தினர் தலைமைக் கழகத்தின் கவனத்துக்கு தங்கள் விருப்பங்களைத் தெரிவித்தனர். கலைஞரும் மனமாற்றம் அடைந்து ராசாவுக்கே அளித்துவிடலாமே எனக் கூறியிருக்கிறார். ஆனால், ‘முரசொலி’யில் அறிவிப்பு வந்த பின்னர் அதை மாற்ற வேண்டாம், அறிவித்தது அறிவித்ததாகவே இருக்கட்டும்” என தலைமையின் முடிவை ஏற்றுக் கொண்டவர் ராசா என்கின்றனர், அந்தச் சூழலை அறிந்த வேலூர் கழக முன்னணியினர்.

**கழக வேட்பாளரை எதிர்த்து சொந்த மாமனாரே நின்றாலும், அவர் களப்பணியாற்றி, வெற்றி பெற வைத்தது கழக வேட்பாளரைத்தான்!**

மூன்று முறை போட்டியிட்டு தோல்வியைத் தழுவி இருந்தாலும், நான்காவது முறையாக தானே போட்டியிடுவதாகக் கூறி, நாட்றம்பள்ளி தொகுதியில் மகேந்திரன் வெற்றிக்காக உழைத்தவர் ராசா. அந்த வெற்றிக்காக கலைஞர் ராசாவை ஒன்றியக்குழு தலைவராக்கினார் தலைவர்.

## கோரிக்கைகளும் உரிமையும்

1993-ஆம் ஆண்டு கழகத்தில் ஏற்பட்ட பிரிவின்போது, வட மாவட்டங்களில் கழகத்தினர் பலரையும் செஞ்சி ராமச்சந்திரன் பிரிக்க முயற்சித்தவர்களில் ராசாவும் ஒருவர். ஆனால், கழகத்தின், கலைஞரின் நம்பிக்கையை எந்தநாளும் ராசா இழக்கவில்லை.

தமிழ்நாடு-ஆந்திரா எல்லைப் பகுதி என்பதால், எல்லையோர ஒன்றியத்தின் உள்ளாட்சித் தலைவராக மக்களின் கோரிக்கைகளை இரண்டு மாநில அரசுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய இடத்தில் இருந்தவர். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, இன்றைய நீர்வளத்துறை அமைச்சர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கையில், பாலாற்றின் குறுக்கே புல்லூர் என்கிற இடத்தில் அணை கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். கலைஞர் நேரில் வந்து அப்பகுதிகளைப் பார்வையிட்டார்.

பேராசிரியர், சாதிக் பாட்சா, சி.வி.எம். அண்ணாமலை கழக முன்னோடிகள் பலரையும் நாட்றம்பள்ளி அழைத்து, நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறார். ஒருமுறை கலைஞர் பொதுக்கூட்டத்துக்கு வந்தபோது திம்மாம்பேட்டை என்கிற இடத்தில் காட்டாற்று வெள்ளத்தை சாகசமாக கடந்து சென்ற நிகழ்வினை கழகத்தினர் பகிர்ந்து கொள்கின்றனர். இன்றைய கழகத்தலைவர் அவர்கள் நாட்றம்பள்ளி ஒன்றியத்தில், ஒரே நாளில் அனைத்து ஊராட்சிகளிலும் கொடியேற்றிய நிகழ்வுகளும் உள்ளன. ஒன்றியக்குழுத் தலைவராக ராசா அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள்தான் ஆவாரங்குப்பம் - திம்மாம்பேட்டை பாலம் போன்றவை .

பட்டியலின மக்களுக்கான தொகுப்பு வீடுகளைக் கட்ட கலைஞர் திட்டத்தினை அறிவித்தபோது, தனக்கு பாகமாகக் கிடைத்த 2 ஏக்கர் நிலத்தை அரசுக்கு அளித்து அங்கு பட்டியலின மக்களுக்கு வீடு கிடைக்கச் செய்தவர். இப்படியான பணிகளால் கலைஞரின் நெஞ்சுக்கு நெருக்கமானவராக இருந்தவர் ராசா.

1997-ஆம் ஆண்டு, மே மாதம் கழக நிகழ்ச்சியாக கலைஞரை சந்திக்க ஒரே காரில் புறப்பட்ட ராசாவும், மகேந்திரனும் ஆம்பூர் அருகே விபத்தில் சிக்கி ராசா உயிரிழந்தார். மகேந்திரன் காயங்களுடன் உயிர்பிழைத்தார். ‘முரசொலி’யில் கலைஞர் இரங்கல் எழுதியதுடன், கழகத்தின் சிறப்பு மாநாட்டுக்காக சேலம் சென்றபோது, ராசாவின் படத்திறப்பில் கலந்துகொண்டு நினைவுகளைப் போற்றினார். சேலம் மாநாட்டின் ஒரு வாயிலுக்கு ‘என்.கே.ராசா நுழைவாயில்’ எனப் பெயர் சூட்டி பெருமை சேர்த்தார் மாநாட்டுப் பொறுப்பாளர் சேலத்துச் சிங்கம் வீரபாண்டி ஆறுமுகம்.

‘ஆட்சி மாற்றங்களால் நிகழ்ந்த நெருக்கடிகளால் குடும்பத் தொழிலையும் துச்சமென நினைத்து, கட்சிப் பணியில் தீவிரம் காட்டியவர் என்.கே.ராசா’ என இன்றைக்கும் அவர் புகழைப் பேசுகின்றனர் கழகத்தினர். அந்த உழைப்பு, கழக வரலாற்றில் இருந்தும், மக்கள் நினைவுகளில் இருந்தும் எந்நாளும் நீங்காது.

**...துடிக்கும்**

## முரசொலிக்கு வழிகாட்டி!



இதழியலில் ‘முரசொலி பாணி’ என்றே உருவாக்கி, அதில் சிறிதும் பிறழாமல் தொடர்ந்து எழுதிக் காட்டியவர். அதேபோல் நுட்பமான செய்திகளை, தன் பாணியில் கட்டுரையில் சுட்டிக் காட்டி, அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் எழுத்துக்குச் சொந்தக்காரர் முரசொலி செல்வம். எந்தச் செய்தியையும் விடாது, ஆங்கிலப் பத்திரிகைகளின் கண்ணோட்டத்தையும் படித்து, அதன் உண்மை நிலையை முரசொலியில் பளிச்சிடச் செய்வதும் அவரது பாணி.

தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணவோட்டம் எப்படி இருக்கும் என்பதை யூகித்து, அதை வெளிப்படுத்துவது அவரது இதழியல் பாணி. கூர்ந்து கவனித்து இதழுக்கு கொள்கை வேகம் ஊட்டும் வல்லமை அவரது இதழியல் திறன்.

தலைவர் நெடிய பயணம் நடந்த போது தொடக்க நாளில் செய்திகளின் கோணம் ஈர்க்கவில்லை., அப்போது நடைப்பயணம் செய்தி... அவர் நடக்கும் வேகம்... பேசுதல். காலுக்கு மருந்து போடும் போதும் அமராமல் இருந்தது என ஒவ்வொரு செயலும் தனித் தனிச் செய்தி என்று வெளியிட்டு, பரபரப்பை உண்டாக்கியது அந்த நேர இதழியல் பாணி.

சட்டமன்ற நிகழ்வின் போது கூண்டில் நிற்க வைத்து கண்டனம்... நிமிர்ந்த நடையோடு பேரவை அறம் காத்து வந்தார். அப்போது அவ்வாறு வைக்கப்பட்ட கூண்டுடன் ஒப்பிட்டு, எத்தனை வகை கூண்டுகள் என்ற விதத்தில் ஜூனியர் போஸ்ட் இதழ் வெளியிட்ட தொகுப்பை ரசித்தார் அவர் ... அவருக்குள் ஆழ்ந்திருந்த இதழியல் ஆளுமை முரசொலிக்கு வழிகாட்டி.

-தி.கூடலரசன், பத்திரிகையாளர்.

## :ப்ளாஷ்பேக்



### உதயசூரியன் நற்பணி மன்றம்!



சு.பத்மநாபன்

1992-ஆம் ஆண்டு அண்ணன் சைதை கிட்டு அவர்கள், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை அழைத்து, திருவல்லிக்கேணியில் கூட்டம் நடத்தினார். அப்போது அந்தப் பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றத்தின் தலைவராக இருந்த நான், தலைவர் தளபதி அவர்களை கதர் துண்டு அணிவித்து வரவேற்றேன். அப்படியான தருணத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**– ‘டி.யு.சி.எஸ்’ சு.பத்மநாபன்,**
**மாநிலப் பொதுச் செயலாளர்.**
**த.நா.நு.கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்,**
**தொ.மு.ச. சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சொல், செயல், சிந்தனை முரசொலி!

1967-ஆம் ஆண்டு, முரசொலி ஆசிரியராக இருந்த கலைஞர் அமைச்சரானதால், முரசொலி ஆசிரியர் பொறுப்புக்கு மாறனை நியமித்தார். அதனால், அவர் முரசொலி மாறன் ஆனார். 1989-ஆம் ஆண்டு முரசொலி மாறன் அவர்கள், வி.பி.சிங் தலைமையிலான ஒன்றிய அமைச்சரவையில் இடம்பெற்றதால், முரசொலி ஆசிரியர் பொறுப்புக்கு செல்வம் அவர்களை நியமித்தார் கலைஞர். அப்போது முதல் ‘முரசொலி’ செல்வம் ஆனார். 1989-ஆம் ஆண்டில் இருந்து, அவரது சொல், செயல், சிந்தனை எல்லாவற்றிலும் முரசொலியே இருந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

627

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131